இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

திங்கள்கிழமை 5.10.2026

விஜய் வீட்டுப் பணமா?

ஒரு பாலத்தின் மீது ஏறி நின்று போஸ் கொடுத்தார் முதலமைச்சர் விஜய். 'இது தி.மு.க. காலத்தில் கட்டிய பாலம்' என்று இணையத்தளத்தில் ஒருவர் விமர்சித்தார். உடனே, 'இது என்ன ஸ்டாலின் சார் தனது சொந்தப் பணத்தில் கட்டிய பாலமா?' என்று கேட்கிறார் விஜய்.

'தாய்மாமன் தங்க மோதிரத் திட்டத்தில் மோதிரம் போடுகிறீர்களே? இது என்ன உங்க சொந்தப் பணமா?' என்று திருப்பிக் கேட்டுள்ளார் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின். இதற்கு விஜய்யிடம் இருந்து எந்த பதிலும் வரவில்லை. வராது.

அனைத்துக் குழந்தைகளுக்கும் அவர் மோதிரம் போட்டு அதனை 'தாய்மாமன்' என்று சொல்லிக் கொண்டால் தவறு இல்லை. அரசாங்கப் பணத்தில் மோதிரம் போட்டால், அது தாய்மாமன் மோதிரமாக எப்படி ஆகும்? அவருக்கு புரியும் வகையில் சொன்னால், 'ஊரான் வீட்டு நெய்யில் உங்க வீட்டுக்கு ஏன் விஜய் ஸ்வீட் செய்யுறீங்க?' என்பதுதான்!

அவர் ஆட்சிக்கு வந்ததும் இரண்டு திட்டங்கள் மிகப்பெரிய விளம்பரம் கொடுத்து தொடங்கி வைக்கப்பட்டுள்ளன. அந்த இரண்டுமே 'திராவிட மாடல்' ஆட்சியில் மாண்புமிகு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட மகத்தான திட்டங்கள் ஆகும்.

2022 ஆம் ஆண்டு செப்டம்பர் 15 அன்று, அண்ணா பிறந்த நாளில், மதுரை மாவட்டத்தில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். தமிழ் நாட்டில் செயல்படும் 37,416 அரசு மற்றும் அரசு உதவிபெறும் தொடக்கப்பள்ளிகளில் பயிலும் 20.59 இலட்சம் மாணவர்கள் தினந்தோறும் காலை உணவை பள்ளிகளில் சாப்பிடத் தொடங்கினார்கள். இதைத்தான் விரிவாக்கம் செய்துள்ளார் விஜய்.

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை, 'பெருந்தலைவர் காமராசர் காலை உணவுத் திட்டம்' என்று பெயர் வைத்துள்ளார். ஏதோ இவருக்கு காமராசர் மீது பெரிய மரியாதை இருப்பதைப் போலக் காட்டிக் கொண்டார். அந்தத் திட்டத் தொடக்க விழாவுக்கான மேடையில் கூட பெருந்தலைவர் காமராசர் பெயர் வைக்கப்படவில்லை. தனது படத்தை மட்டும் பெரிதாக வைத்து, அதற்குக் கீழே அவரே உட்கார்ந்து கொண்டார். மாணவர்களைக் கூட அருகில் உட்கார விடாமல் தள்ளித் தள்ளி உட்கார வைத்தார்.

மதிய உணவுத் திட்டம் பெருந்தலைவர் காமராசர் காலத்தில் போடப்பட்டது என்றால் காலை உணவுத் திட்டத்தை முதன்முதலாகத் தொடங்கியவர் திராவிட மாடல் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். அந்தப் பெயரை மறைக்க வேண்டும் என்பதற்கான கெட்ட எண்ணத்தில் விஜய் செயல் பட்டார். ஆனாலும் குழந்தைகள் பொய் சொல்லாது அல்லவா?

ராஜாவை மிஞ்சிய ராஜ விசுவாசியான தமிழ்நாட்டு ஊடகம் ஒன்று ஒரு மாணவனிடம் கேட்டது. 'இப்ப தானே முதன்முதலா நீ பள்ளிக்கூடத்துல சாப்பிடுற? சாப்பாடு எப்படி இருந்தது?' என்று நிருபர் கேட்டதும், 'நான் நாலு வருஷமா பள்ளிக் கூடத்துல தான் சாப்பிடுறேன்' என்று அந்தச் சிறுவன் பதில் அளித்தான். அந்த ஊடகத்துக்கு மட்டுமல்ல, முதலமைச்சர் விஜய்க்கும் அந்தச் சிறுவன் சொன்ன பதிலடி இது. என்ன பெயர் மாற்றினாலும் அது திராவிட மாடல் ஆட்சியின் திட்டம்தான் என்பதை மறைக்க முடியாது.

அதே போலத் தான், மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து பயணத்தை வெற்றிப் பயணம் என்று பெயர் சூட்டி இருக்கிறார் முதலமைச்சர் விஜய்.

2021 ஆம் ஆண்டு தான் முதலமைச்சர் ஆன முதல் நாளே, மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் போட்ட கையெழுத்துதான் இந்தத் திட்டம். ஆட்சி மாறியதும் விடியல் வந்துவிட்டது என்பதை உணர்த்தும் வகையில் விடியல் பயணம் என்று பெயர் சூட்டப்பட்டது. 'மு.க.ஸ்டாலின் விடியல் பயணம்' என்று பெயர் சூட்டலாம் என்று பலரும் ஆலோசனை சொல்லப்பட்டபோது, அதை மறுத்து, 'விடியல் பயணம்' என்று மட்டும் சூட்டினார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின். ஆனால் மக்கள் இதனை 'ஸ்டாலின் பஸ்' என்று சொல்லி அழைப்பதாக ஊடகங்களுக்கு பேட்டி கொடுத்தார்கள். அதாவது அரசாங்க ஆணையில் இல்லை, இதயத்தில் அப்படி பொறிக்கப்பட்டது.

இத்திட்டத்தின் பயனாக பேருந்தில் பயணம் செய்யும் ஒவ்வொரு மகளிருக்கும் மாதந்தோறும் 600 முதல் 1200 ரூபாய் வரை சேமித்தார்கள். பெண்களின் சமூகப் பங்களிப்பு அதிகம் ஆனது. இதைத் தான் விரிவாக்கம் செய்துள்ளார் விஜய். 'வெற்றி' என்ற ஸ்டிக்கரை ஒட்டி இருக்கிறார்.

இதுவரை விஜய் செய்திருப்பது, புதிய புதிய ஸ்டிக்கர்கள் மட்டுமே!

★ கலைஞர் மகளிர் உரிமைத் தொகைக்கு மகளிர் உரிமைத் தொகை என ஸ்டிக்கர் ஒட்டினார்.

★ நான் முதல்வன் திட்டத்துக்கு வெற்றித் திறன் பயிற்சித் திட்டம் என ஸ்டிக்கர் ஒட்டினார்.

★ கலைஞர் கனவு இல்லம் திட்டத்துக்கு வெற்றி வீடுத் திட்டம் என ஸ்டிக்கர் ஒட்டினார்.

★ அன்புச்சோலைகளுக்கு மூத்த குடிமக்கள் பொழுது போக்கு மையம் என ஸ்டிக்கர் ஒட்டினார்.

★ உலகம் உங்கள் கையில் என்பதற்கு வெற்றி மடிக்கணினி திட்டம் என ஸ்டிக்கர் ஒட்டினார்.

★ முதல்வர் படிப்பகங்களுக்கு டிஜிட்டல் நூலகம் என ஸ்டிக்கர் ஒட்டினார்.

★ நன்னிலம் மகளிர் நில உடமைத் திட்டத்துக்கு மண்ணின் மகள் திட்டம் என ஸ்டிக்கர் ஒட்டினார்.

★ விலையில்லா மிதிவண்டி திட்டத்துக்கு நவீன மிதிவண்டித் திட்டம் என ஸ்டிக்கர் ஒட்டினார்.

★ தகைசால் பள்ளிகளுக்கு பெருந்தலைவர் காமராசர் சிறப்புப் பள்ளி என ஸ்டிக்கர் ஒட்டினார்.

★ ஆடு, செம்மறி ஆடு ஊக்குவிப்புத் திட்டத்துக்கு வெற்றி மகளிர் ஆடுகள் வளர்ப்புத் திட்டம் என ஸ்டிக்கர் ஒட்டினார்.

ஆட்கள் முதல் ஆடுகள் வரை அனைத்தின் தலையிலும் ஸ்டிக்கர் ஒட்டியதுதான் விஜய் செய்த ஒரே வேலை.

எந்த திட்டமும் அந்த முதலமைச்சரின் சொந்தக் காசில் செய்யப்படுவது இல்லை. சொந்த மூளையால் அறிவிக்கப்படும். ஆனால் விஜய் சொந்த மூளையாலும் எந்தத் திட்டத்தையும் அறிவிக்கவில்லை.

●●

'தூய சக்தி' எனத் தம்பட்டம் அடித்த CM சார்....

உங்களது 'ரீல்' நான்கே மாதங்களில் அறுந்து தொங்கி விட்டதே!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் - சமூக வலைதளப் பதிவில் கேள்வி!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் (04.10.2026), விடுத்துள்ள சமூக வலைத்தளப் பதிவு வருமாறு:

"CM சார்...
நாடு சிரிக்கும் நான்கு மாதங்கள்!
இந்த நான்கு கேள்விகளுக்குப் பதிலுண்டா...?

1 பெண்களைப் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக் கியோரைச் சட்டமன்ற உறுப்பினர்களாகவும் மாவட்டச் செயலாளர்களாகவும் வைத்துக்கொண்டு முதலமைச்சர் பெண் பாதுகாவலர் போல வேடம் போடலாமா?

2 அறிவிக்கப்படாத மின்வெட்டில் இருந்து, இனி தினமும் அறிவித்து விட்டு 8 மணிநேரம் மின் வெட்டு என்பதை நோக்கித் தமிழ்நாடு நகரவுள்ளதாக வரும் செய்திகள் உங்கள் செவிகளை எட்டவில்லையா?

3 அசையாத மரமொன்று விழுந்தது கீழே என்ற கதையாக, இடைத்தேர்தல் தோல்வியைத் தவிர்க்க நீங்கள் மணிக்கணக்கில் தெருவலம் போவது போதாமல், டிபன் கேரியரில் பணமும் போகிறதாமே? ஒரு தெருவுக்கு இவ்வளவு என வாக்குகள் விலைபேசப்படுவதாக உங்கள் ஆட்சி அமைய ஆதரவு தெரிவித்த கட்சிகளே குற்றம் சாட்டுவதற்குப் பதில் என்ன?

4 இத்தோடு, குதிரைவேக குதிரை பேரத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படுமா? அல்லது, இனியும் TVK Horse Trading–இன் அடுத்த Season தொடருமா?

தூயசக்தி எனத் தம்பட்டம் அடித்த உங்களது ரீல் இப்படி நான்கே மாதங்களில் அறுந்து தொங்கிவிட்டதே!"

இவ்வாறு அவர் பதிவிட்டுள்ளார்.







மதுராந்தகம், தாராபுரம் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு...

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அன்பு வேண்டுகோள்!

விலைவாசியை கட்டுப்படுத்தச் சொன்னால் ஜோசியரின் ஆலோசனையைக் கேட்கிறார்!

விலைவாசியைக் கட்டுப்படுத்தச் சொன்னால், முதலமைச்சர் ஜோசியரின் ஆலோசனையைக் கேட்டு 1,200 கோடி ரூபாயில் தலைமைச் செயலகம் கட்டுவார். விவசாயிகள், மீனவர்கள், அரசு ஊழியர்கள் போராடினால் அதைப் பற்றிக் கவலைப்படாமல் லண்டனுக்குச் சென்று கார் பந்தயம் பார்ப்பார். கொத்துக் கொத்தாகக் கொலைகள் நடந்தால் அதைப் பற்றிக் கவலைப்படாமல் "சிங்கப்பெண் படை" என்று ரீல்ஸ் வெளியிடுவார். இப்போதைக்கு அவர்களது கவனம் முழுவதும், ஆட்சியைக் காப்பாற்றுவதற்காக எப்படி சட்டமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்கலாம் என்பதில்தான் இருக்கிறது.

எனவே, நான் உங்களிடம் கேட்டுக்கொள்வது ஒன்றுதான். பிரச்சாரத்திற்கு வந்த ஆளுங்கட்சி வேட்பாளர்களை ஊருக்குள்ளேயே அனுமதிக்காமல் எப்படி விரட்டினீர்களோ, அதேபோன்று அக்டோபர் 6ஆம் தேதி உங்கள் வாக்குகளால் அவர்களுக்குத் தோல்வியைக் கொடுத்து விரட்டியடிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

முதல் பக்கத் தொடர்ச்சி

மக்களுக்கு எப்படிப்பட்ட பிரச்சினைகள் வந்தாலும் ரீல்ஸ் போட்டும், பொய்யான கதைகளைச் செய்திகளாக்கியும் மக்களை ஏமாற்றிவிடலாம் என்று நினைக்கும் த.வெ.க.வுக்கு, மக்களாகிய நீங்கள் இந்தத் தேர்தலில் ஏமாற்றத்தைத் தர வேண்டும். ஆளுங்கட்சியின் ஆணவத்துக்கும் அதன் வேட்பாளரின் துரோகத்துக்கும் நீங்கள் சரியான பாடம் புகட்டினால்தான், மீண்டும் நமது தமிழ்நாட்டில் எங்கேயும் இதுபோன்ற அநியாயம் நடைபெறாது.

உங்களுக்காகவும், இந்தத் தொகுதியின் வளர்ச்சிக்காகவும், மிக முக்கியமாக உங்களுக்கு உண்மையாக இருந்து மக்கள் பணியாற்றவும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் போட்டியிடும், மக்களின் குரலாக, உண்மைக்கான பாதுகாவலனாக ஊடகங்களில் ஒலிக்கும் வழக்கறிஞர் இ. பரந்தாமன் அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து, பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெறச் செய்ய வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

வாக்குச்சாவடிக்குச் செல்வதற்கு முன்பு, உங்களது மின்கட்டணத்தையும் மளிகைக் கடை பில்லையும் ஒரு முறை பார்த்துவிட்டுக் கிளம்புங்கள்! தன்மானமுள்ள மதுராந்தகம் மக்களே, உதயசூரியன் சின்னத்தில் வாக்களியுங்கள்!

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொலியில் உரையாற்றியுள்ளார்.

ஆணவத்துடன் பேசியவரை டீக்கடை, வயல் என தெருவுக்கு வரவச்சாங்க பாரு

இதுதான் திராவிட இயக்க அரசியல்!

புரட்சித் தமிழன் சத்தியராஜ் விமர்சனம்!

சென்னை, அக். 5-

நான் 5 நிமிடம் பேசினாலே, எல்லோரும் தோற்பார்கள் என்று பேசியவரை வயல், தெரு, டீக்கடை, காய்கறி மார்க்கெட், 5 மணி நேரம் ரோடு ஷோ என்று வரவழைத்தது தான் திராவிட இயக்க அரசியல் என்று நடிகர் சத்யராஜ் தெரிவித்துள்ளார்.



இதுகுறித்து தமது சமூகவலைதள பக்கத்தில் பதிவிட்டுள்ள நடிகர் சத்யராஜ், இந்த இடைத்தேர்தலில் தி.மு.க., அ.தி.மு.க. ஜெயிக்கிறதோ, தோற்கிறதோ, ஆனால், நான் 5 நிமிடம் பேசினாலே எல்லோரும் தோற்பார்கள் என பேசியவரை வயல், தெரு, டீக்கடை, காய்கறி மார்க்கெட், 5 மணி நேரம் ரோடு ஷோ, 2 முறை ஒரே தொகுதிக்கு பரப்புரைனு மண்டி போட விட்டு, தெருவுக்கு வர வச்சாங்க பாரு இதுதான் திராவிட இயக்க அரசியல் என பதிவிட்டுள்ளார்.